2004 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 43, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

43—

சத்துணவுக் கூடங்கள்

***32333—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியிலுள்ள அனைத்து பள்ளிகளின் சத்துணவுக் கூடங்களுக்கு எல்.பி.ஜி. சமையல் எரிவாயு அடுப்பை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சத்துணவுக் கூடங்களில் விறகு அடுப்புக்குப் பதிலாக எல்.பி.ஜி. எரிவாயு அடுப்பைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதியில், சீர்காழி ஒன்றியம் மற்றும் கொள்ளிடம் ஒன்றியம் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் சுமார் 203 சத்துணவுக் கூடங்களும் 81 ஊட்டச் சத்து மையங்களும் உள்ளன. இவற்றில் சமையல் செய்வதற்கு விறகுகளைப் பயன்படுத்துவதால் அருகிலுள்ள பள்ளி மாணவ, மாணவிகள் புகையினால் மிகவும் பாதிப்பு அடைகின்றனர். மேலும், இதற்கான செலவினங்களும் அதிகமாக உள்ளன. சுற்றுப்புறமும் மாசுபடுகின்றது. எனவே இதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு மேற்கண்ட அனைத்து சத்துணவுக் கூடங்கள் மற்றும் ஊட்டச் சத்து மையங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு வழங்க முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 41,118 பள்ளி சத்துணவு மையங்களும், 30,639 குழந்தை நல மையங்களும் ஆக மொத்தம் 71,757 மையங்கள் உள்ளன. அனைத்து மையங்களுக்கும் எல்.பி.ஜி. சமையல் எரிவாயு பயன்படுத்த அனுமதி வழங்க வேண்டுமென்றால் கொள்கை அளவில்தான் முடிவு எடுக்க வேண்டும். சீர்காழி தொகுதியில் அனைத்துப் பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களில் மட்டும் இதைப் பயன்படுத்துவது குறித்து தனியாக முடிவு எடுக்க முடியாது. தற்பொழுது சீர்காழி தொகுதியில் 203 பள்ளி சத்துணவு மையங்களில் ஒரு பயனாளிக்கு 11 பைசா வீதம் விறகிற்கான செலவு 82,067 ரூபாய் செலவிடப்படுகிறது. ஒரு மாதத்திற்கு ஆகும் தொடர் செலவினம் 1,29,220 ரூபாய். இதனால் எல்.பி.ஜி. சமையல் எரிவாயு பயன்படுத்தப்பட்டால் ஒரு மாதத்திற்கு ஆகும் தொடர் செலவினத்தில் மிகைச் செலவு 47,153 ரூபாய். மேலும், தொடரா செலவு 5,07,500 ரூபாய், தற்போது அரசு சந்தித்து வரும் நிதி நெருக்கடியில் மேற்காணும் செயற்குறிப்பு தொடர்பாக பரிசீலனை செய்ய இயலாது. இருந்தாலும் மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர் தன்னுடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தத் தொகுதிக்கு மட்டும் சமையல் எரிவாயு வாங்கிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரேயானால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டிலே செய்ய இயலாவிட்டாலும் வருகின்ற நிதியாண்டிலாவது சமையல் எரிவாயு இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுக்கிறீர்களா என்று கேட்கிறார்கள். (சிரிப்பு) மாதா மாதம் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து மாதா மாதம் கொடுப்பது என்பது ரொம்ப சிரமமாக இருக்கும். அப்படிச் செய்வது நடைமுறையில் சிரமமாக இருக்கும்.

TRUTH ALONE TRIUMPHS

2004 பிப்ரவரி 12]

முற்பகல் 10-05

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. லா. சந்தானம்.

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்கலாம் என்று சொன்னார்கள். அதற்கு இப்போதுள்ள நிலைமையில் நாங்கள் தயாராக இருந்தாலும், வருகின்ற காலத்தில், தொடர்ச்சியாக அதை நிலை நிறுத்துவதற்கு, நடத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் அந்த கேஸ் வாங்கிக் கொடுப்பதற்கு இயலுமா என்கின்ற கேள்வி எழுகிறது. அதை நிச்சயமாகச் செயல்படுத்த முடியாது. ஆரம்ப கட்டத்தில் வேண்டுமென்றால் நிதி ஒதுக்கி சட்டமன்ற உறுப்பினர்கள் வாங்கித் தரலாம். ஆனால் அந்தத் தொடர்ச் செலவினங்களை ஏற்றுக்கொள்வது என்பது மிகக் கடுமையான நிலையாக இருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து, வருகின்ற ஆண்டிலாவது—இது ஒரு நல்ல திட்டம்தான். இன்றைக்கு நாடு வளர்ந்துகொண்டிருக்கின்ற நிலையில், அங்கே இருக்கின்ற சமையலர்களும், குழந்தைகளும் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு—இதை பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரைக்கும் சத்துணவுப் பயனாளிகளுக்கு உணவீட்டுச் செலவினமாக வழங்கப்பட்டு வந்த இந்தத் தொகையே 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை 6 பைசா என்றுதான் உயர்த்தப்பட்டு வந்தது. அதிலே எரிபொருள் செலவும் உள்ளடக்கித்தான் 6 பைசாவை ஏற்றி வழங்கப்பட்டு வந்தது. ஆனால் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனித நேயத்தோடு, இந்த உணவீட்டுச் செலவினத்தை, எரிபொருள் உட்பட முழுவீச்சிலே 23 பைசாவிலேயிருந்து 35 பைசாவாக 12 பைசாவை ஒரே நேரத்தில் உயர்த்தி வழங்குவதற்கு ஆணையிட்டவர்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை வழங்குகிறபோதுகூட மாண்புமிகு

அம்மா அவர்கள் சொன்னார்கள், மேலும் இந்தத் தொகையை உயர்த்தித் தருவதற்குப் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறார்கள். மீண்டும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக்கொண்டு சென்று அரசு சிந்திக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 44, திரு. ப. பொன்னம்பலம், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

44—

தாட்கோ கடன்

***24228—திரு. ப. பொன்னம்பலம்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோவில் ஆதிதிராவிடர் மகளிர் குழுக்களுக்குக் கடன் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாட்கோ மூலம் ஆதிதிராவிடர் மகளிர் குழுக்களுக்குக் கடன் உதவி வழங்கும் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. ப. பொன்னம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாட்கோ மூலமாக ஆதிதிராவிட மகளிர் எத்தனை பேர் பயன் பெற்றார்கள்? அதில் மதுரை மாவட்டத்திலே எத்தனை மகளிர் பயன்பெற்றார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU
TRUTH ALONE TRIUMPHS